**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW1/LW1 |
| Name | : | திரு. அமானுல்லா |
| Father's/Husband Name | : | முகமது சுல்தான் |
| Village | : | பட்டுக்கோட்டை |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of March 2022

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திருமதி. த. சுமதி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை சிவக்கொல்லையில் வசித்து வருகிறேன். நான் பட்டுக்கோட்டை பாவா மெடிக்கல் சந்தில் செருப்புக்கடை வைத்துள்ளேன். எதிரிகள் ரமேஷ், செந்தமிழ், சத்தியா மற்றும் இறந்துபோன எதிரி சிரஞ்சிவியை தெரியும். கடந்த 12.01.2013 அன்று இரவு 10.30 மணியளவில் நான் எனது வீடான சிவக்கொல்லை அருகே சென்றுக்கொண்டிருந்தபோது அப்துல் காதர் போன் செய்து வீட்டில் பிரச்சனையாக இருக்கிறது, உடனே சென்று பார் என்று சொன்னார். நான் உடனே அப்துல் காதர் வீடான வளவன்புரம் சென்று பார்த்தபோது இரவு 11.00 மணியளவு இருக்கும். அப்போது அங்கிருந்த ரமேஷ், செந்தமிழ், சத்தியா, சிரஞ்சிவி ஆகியோர் அங்கு இருந்தனர். ரமேஷ் இரும்பு கம்பியால் எனது முகத்தில் அடித்தார். செந்தமிழ் , சத்தியா ஆகியோர் கட்டையால் என்னை எனது கால், இடுப்பு , தோள்பட்டையில் அடித்தனர். சிரஞ்சிவி என்பவர்

N AZHAGESAN Digitally signed by N AZHAGESAN

Approved

அருவாளால் மடக்கி மண்டைக்கு பின்புறமாக என்னை அடித்தார். ஜமாத்தில் இருந்து ஆட்கள் வந்து இருந்தார்கள். அவர்களையும் செந்தமிழ், சத்தியா, ரமேஷ் ஆகியோர் அடித்தனர். இதோட விட்டுவிடுவேன் என நினைக்காதே, தேவடியா மகனே உன்னை கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார்கள். என்னையும், அப்துல் காதரையும் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தனர் பின்பு மேல் சிகிச்சைக்கு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலமானது **அசாஆ 1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

(எதிரிகள் ஆஜர் இல்லை. U/s.317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

N AZHAGESAN Digitally signed by N AZHAGESAN

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பட்டுக்கோட்டை.

Adobe

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW2/LW2 |
| Name | : | திரு. முகமது அப்துல் காதர் |
| Father's/Husband Name | : | திரு. சேக் முகமது |
| Village | : | ராமநாதபுரம் |
| Taluk | : | ராமநாதபுரம் |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of March 2022
**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திருமதி. த. சுமதி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் இராமதபுரம் ஜீம்மா பள்ளிவாசலில் இம்மாமாக இருந்து வருகிறேன். இதற்கு முன்பு பட்டுக்கோட்டை வளவன்புரத்தில் 12.01.2013 ந் தேதியன்று இரவு 10.30 மணியளவில் வீட்டில் இருந்தபோது எதிரிகள் ரமேஷ், சிரஞ்சிவி, சத்தியா, செந்தமிழ் ஆகியோர் குடித்து இருந்ததால் தேவடியா மகனே குச்சிகாரி மகனே என அசிங்கமாக திட்டி என்னிடம் தகராறு செய்தார்கள். நான் உடனே ஜமாத்திற்கு போன் செய்தேன். ஜமாத்தில் இருந்து போன் செய்து அசா1 அமானுல்லா இரவு 11.00 மணியளவில் வந்து ஏன் தகராறு செய்கிறீர் என கேட்டார். அப்போது எதிரிகள் கையில் கட்டை மற்றும் அருவால் போன்ற ஆயுதங்கள் வைத்து இருந்தார்கள். என்னை செந்தமிழ், சத்தியா இருவரும் கட்டையால் எனது உடம்பு, கால் , கையில் அடித்தார்கள். அசா1 அமானுல்லாவை ரமேஷ் இரும்பு பைப்பால் முகத்தில் அடித்தார். அதில் அவருடைய பல் உடைந்தது. சிரஞ்சிவி அருவாளை கொண்டு அமானுல்லாவின்

N AZHAGESAN Digitally signed by N AZHAGESAN

Approved

தோள்பட்டை, இடது கால் முட்டி ஆகிய இடங்களில் அருவாளின் பின் பக்கத்தால் அடித்தார். எதிரிகள் போகும்போது எங்களை பார்த்து இனி பிரச்சனை செய்தால் கொலை செய்துவிடுவோம் என ஆயுதத்தை காட்டி மிரட்டி சென்றனர். இந்த வழக்கு சம்பந்தமாக அமானுல்லா புகார் கொடுத்தார். பிறகு காயம் பட்ட என்னை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்து அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது பட்டுக்கோட்டை நகர போலிசார் என்னை விசாரித்தனர். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(எதிரிகள் ஆஜர் இல்லை. U/s.317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

N AZHAGESAN Digitally signed by N AZHAGESAN

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

Adobe

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW3/LW6 |
| Name | : | திரு. அப்துல்லா |
| Father’s/Husband Name | : | திரு. சம்புசாமி |
| Village | : | அதிராம்பட்டிணம் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of March 2022 **(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திருமதி. த. சுமதி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அதிராம்பட்டிணத்தில் வசித்து வருகிறேன். நான் பிஸ்கெட் வியாபாரம் பார்த்து வருகிறேன். அசா1, 2 ஆகியோரை எனக்கு தெரியும். 12.01.2013 ந் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நான் பட்டுக்கோட்டை தங்கவேல் நகரில் அசா1 அமானுல்லா எனக்கு போன் செய்து ரமேஷ், செந்தமிழ், சத்தியா, சிரஞ்சிவி ஆகியோர்அடித்து விட்டதாக அசா1, 2 ஐ அசா2 இமாம் வீட்டில் வைத்து அடித்ததாக சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அசா1 ற்கு பல் உடைந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. பிறகு காயம்பட்ட அசா1, 2 ஐ பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். மேல் சிகிச்சைக்கு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் ஆஜர் இல்லை. U/s.317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

N AZHAGESAN Digitally signed by N AZHAGESAN

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

Verified

web copy